19th October 1964]

திரு. மீ. கலியாணசுந்தரம் : அபிவிருத்தி எந்த அளவுக்கு இருக்கிறது என்பதற்குக் கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு புள்ளிவிவரம் அமைச்சர் அவர்களிடம் இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆறு கல்லூரிகள் தனிப்பட்டவர்கள் நடத்தும் கல்லூரிகள். 1961-62-ல் 65% பாஸ், 1962-63-ல் 69% பாஸ், 1963-64-ல் 81% பாஸ். இதிலிருந்து நிலைமை அபிவிருத்தி ஆகியிருக்கிறது என்பது தெரிய வருகிறது.

திரு. வை. சங்கரன் : பொறியியல் கல்லூரிகளை இன்றைக்கு உள்ள நவீன முறைக்கு ஏற்றபடி மாற்றி அமைக்காத காரணத்தினால், ஓரளவுக்குத் தரம் குறைவாக இருக்கிறது. ஐ.ஏ.எஸ். போன்ற காம்பெடிஷன் பரீட்சைகளில் தென் பகுதியில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் தேர்வு குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, நவீன முறைகளுக்கு ஏற்றபடி கல்லூரிகளை மாற்றி அமைத்து, தரத்தை அதிகரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொறி இயல் கல்லூரிகளில், இந்த மாநிலத்தில், தரம் குறைவாக இருக்கிறது என்பதை நான் ஒருக்காலும் ஒப்புக்கொள்ள முடியாது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அரசாங்கக் கல்லூரிகளில் இந்த அபிவிருத்தி எந்த அளவுக்கு இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றித் தனிக் கேள்வி கேட்டால் விவரங்கள் கொடுக்கலாம்.

Engineering College for Salem District

* 26 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details of the proposal to locate an Engineering College in Salem District; and

(*b*) the present stage of the proposal and when the College would start functioning?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The College will be located at a site on the Salem-Omalur main road at a distance of seven miles from Salem Town.

(*b*) Acquisition of a considerable portion of the site is already over. Administrative approval has been accorded for the building and water supply schemes and a Special Construction Division has also been sanctioned for executing the works. The College will start functioning from the academic year 1965–66.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சேலம் என்ஜினியரிங் கல்லூரியும், பொதுவாக மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட இருந்த மற்ற என்ஜினியரிங் கல்லூரிகளும் எந்த நிலையில் இருக்கின்றன ?

[19th October 1964

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

கனம் சபாநாயகர் : குறிப்பாகத் திருநெல்வேலி என்று கேளுங்களேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நில ஆர்ஜிதம் செய்து முடிந்து விட்டது என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த விவசாயிகளுக் கெல்லாம் பணம் பட்டுவாடா செய்வதில் தாமதம் இருப்பதால், அதைத் துரிதமாகப் பட்டுவாடா செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது கவனிக்கப்பட்டுத் தான் வருகிறது.

திரு. சா. கணேசன் : இந்தக் கல்லூரி இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குள் தொடங்கப்படும் ? மொத்த எதிர்பார்க்கப்படும் அடிப்படைச் செலவுகள் எவ்வளவு ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அடுத்த ஆண்டிலே துவக்கப் படும் என்று முன்னமே குறிப்பிட்டேன். செலவு விவரம் என்னிடம் இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : 1965-66-ல் தொடங்கப்படும் என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறியதில் மகிழ்ச்சி. அஸ்திவாரம் கூட இன்னும் போடப்படவில்லை. வேலை தொடங்கி எப்பொழுது கட்டடம் பூர்த்தி செய்யப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கட்டட நிலைமை பற்றி என்னிடம் விவரங்கள் இல்லை. ஆனால், ஓரளவுக்குக் கட்டடம் கட்டப்பட்டு, எப்படியும் கல்லூரி துவங்கப்படலாம் என்று தான் அரசாங்கம் கருதுகிறது.

Purchase of 'Thamilagam'

* 27 *Q*.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether additional amount by way of interest had to be paid for 'Tamilagam' at Ooty on account of the fact that there was undue delay in the payment of purchase price, and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Government had to pay interest on the purchase price of the property, pending payment of the amount which could be made only after confirmation of title of the vendor. But there was no actual loss to Government on this account in view of the fact that, though the payment was made only in March, 1964, the buildings and land has been taken possession of by the Government even in December, 1958, and the interest paid has to be taken to be in lieu of the rent payable for the buildings and land for the period from the date of taking possession of the property to the date of payment of the purchase price.